வனம் அமைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு தென்னாட்டில் ஒரே ஒரு இடத்தில்தான் இந்த நிறுவனத்துக்கு அங்கீகாரம் அளிக்க முடியும் என்று சொன்ன காரணத்தினால், அது பங்களூராக அமைந்துவிட்ட காரணத்தால், மாநில அரசே தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இதை அமைப்பது என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. இதைப்பற்றிய திட்டங்கள், விவரங்கள் இனிமேல்தான் தயாரிக்கப்பட வேண்டும்.

Stupa built in memory of Rajaji's participation in Salt Satyagraha at Vedaranyam.

* 31. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that proposals have been sent to the Government by the Collector of Thanjavur for rebuilding the whole structure of the Stupa built in memory of Rajaji's participation in Salt Satyagraha in 1930 at Vedaranyam, damaged recently by lightning;

(b) if so, the nature of the proposal; and

(c) the action contemplated to be taken by the Government in the matter?

வேதாரண்யத்தில் இராஜாஜி அவர்கள் உப்பு சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டதன் நினைவாகக் கட்டப்பட்ட நினைவுச்சின்னம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேதாரண்யத்தில் இராஜாஜி அவர்கள் 1930-ல் உப்பு சத்தியாக் கிரகத்தில் பங்கு கொண்டதன் நினைவாகக் கட்டப்பட்டு அண்மையில் மின்ன லால் தாக்கப்பட்டு சேதமுற்ற நினைவுச்சின்னம் முழுவதையும் மறுபடியும் கட்டித்தரும்படி கோரும் செயற்குறிப்புகளை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு அனுப்பியுள்ளார் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அச்செயற்குறிப்பின் தன்மை யாது?

(உ) இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

1974 சனவரி 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) 9—8—1973 அன்று மழையாலும், மின்னலாலும் சேதமுற்ற ஸ்தூபியை ரூபாய் 5,000 மதிப்பீட்டுச் செலவில் புதுப்பிப்பதற்கான செயற்குறிப்புகள் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்துள்ளன. நிலத்தைக் கையகப்படுத்தும் செலவும் இதில் அடங்கும்.

(உ) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஸ்தூபியைப் புதுப்பிப்பதற்காக, பொது (சிவில், பாதுகாப்புத் துறையின் 14—11—1973 நாளிட்ட 4051 ஆம் எண்) அரசு ஆணையில் ரூபாய் 5,000-க்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்த ஸ்தூபியைத் தான் அரசாங்கம் புதுப்பிக்க முற்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும் போது, நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? ஏற்கெனவே நிலம் ஸ்தூபியைச் சேர்ந்ததாகத் தானே இருக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஏற்கெனவே நினைவுச் சின்னம் தனிப்பட்ட சுப்பையா பிள்ளை என்பவருக்குச் சொந்தமாக இருக்கிறது. நினைவுச் சின்னம் இருந்த தகவல்கள் பொறிக்கப்பட்டிருக்கிற கல் நான்கு துண்டுகளாகச் சிதறி உடைந்துவிட்டது. நினைவுச் சின்னத்தின் ஒரு பகுதியிலே பெரிய அளவுக்கு விரிசல் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் மறுபடியும் எதிர்காலத்தில் யாராவது சொந்த உரிமை கொண்டாடினால், கஷ்டமாக இருக்கும் என்பதற்காக, அதைக் கையகப்படுத்திவிடுவது நல்லது என்று அரசு கருதி, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அவ்வாறு செய்யச் சொன்னது. அவர் விலை கொடுத்தாவது அல்லது சுப்பையா பிள்ளை குடும்பத்தாரிடத்தில் இனாமாகவாவது பெற்று, அரசுப் பொறுப்பில் சொந்தமாக்கிக் கொண்டு, நினைவுச் சின்னம் அமைக்கலாம் என்று யோசனை சொன்னார்.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, அது திருத்தியமைக்கப்பட்ட பிறகு, முழுக்க முழுக்க அரசின் நிர்வாகத்திலும், அரசுப் பொறுப்பிலும் இருந்து வரத்தக்க நிலையில் செயல்படுத்தப்பட்டிருக்கிறதா? அப்படியானால், அது நேரடியாக சென்னை நிர்வாகத்தில் இருக்குமா? அல்லது தஞ்சை கலெக்டர் மூலமாக அது நிர்வகிக்கப்படுமா, அல்லது பி.டபிள்யூ.டி. மூலமாக நிர்வகிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, விடுதலைப் போராட்டத்தின் நினைவுச் சின்னங்கள், தேசத் தலைவர்களுடைய நினைவுச் சின்னங்கள் இவைகளைப் போற்றிப் பாதுகாப்பதில் இந்த அரசு மிக அக்கறை உடையது

என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே இது அரசுப் பொறுப்பிலேயே இருக்கலாம் என்று அரசு கருதுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய கண்காணிப்பிலே இருந்தாலும், அது அரசின் பொறுப்பிலே இருப்பதாகத்தான் பொருள்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5,000 ரூபாய் செலவில் அதைப் புதுப்பிக்கலாம் என்று சொன்னார்கள். அதைவிட கொஞ்சம் அதிகம் செலவு செய்து சிறப்பாகச் செய்ய யோசிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆரம்பத்திலே 5,000 ரூபாய் போதுமானது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியின் அடிப்படையிலே வேண்டுமானால், அதைப் பற்றி ஆராய்ந்து சிறப்புடையதாகச் செய்வதில் அரசிற்கு எந்த விதமான ஆட்சேபணையும் கிடையாது.

Bonus to Teachers.

* 32 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the bonus sanctioned to teachers in Non-Government Educational Institutions in G.O. Ms. No. 1243, Education, dated 20th July 1971 has been paid to such teachers; and

(*b*) if not, the reasons therefor?

ஆசிரியர்களுக்கு பூரிப்பூதியம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையின் 20—7—1971 நாளிட்ட 1243-ஆம் எண் அரசு ஆணையில் அரசு நிறுவனமல்லாத கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட பூரிப்பூதியம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதா?

(இ) இல்லையெனில் அதற்கான காரணங்கள் யாவை?